IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | S.C. 38/2021 |
| | Prosecution |
| Deposition of witness for | LW4, PW4 |
| Name | புஷ்பா |
| Father’s Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 14th day of December 2023.

**14.12.2023.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சிக்கு கன்னடம் மட்டும் முழுமையாக தெரியும் என்று தெரியவருவதால் அவர் அளிக்கின்ற சாட்சியத்தை தமிழில் மொழிபெயர்த்து கூறும் பொருட்டு திருமதி. ஆர்த்தி அவர்கள் மொழிபெயர்ப்பாளராக இருதரப்பு சம்மதத்தின் பேரில் அமர்த்தப்பட்டார்.

முதல் விசாரணை:-

நான் தற்சமயம் ஆசிங்டன் எஸ்டேட்டில் வேலை செய்து வருகிறேன். அசா1 பாதிக்கப்பட்ட பெண் அக்கா ஆவார். அசா2 என் அம்மா. என் அம்மாவிற்கு நாங்கள் 6 குழந்தைகள் என் அப்பா இறந்துவிட்டார். எனது அக்கா பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு குண்டல்பேட்டில் திருமணம் செய்து கொடுத்தோம். இந்த வழக்கு சமயத்தில் நான் திருப்பூரில் வேலை செய்து வந்தேன். எனது அக்காவை என் அம்மாவின் தம்பி தர்மராஜ்

என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். திருமணமாகி என் அக்கா அவர் கணவருடன் ஒரு வருட காலம்தான் இருந்தார். மீண்டும் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார். தேதி ஞாபகம் இல்லை மார்ச் மாதம் 2020ம் வருடம் என் அக்காவிற்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் அவரை என் அம்மா மருத்துவமனை அழைத்து சென்றார். மருத்துவமனையில் என் அக்காவை செக்அப் செய்து அவர் கர்ப்பமாக இருப்பதாக சொல்லியுள்ளார்கள். என் அம்மா மீண்டும் வீட்டிற்கு கூப்பிட்டு வந்து எவ்வாறு கர்ப்பமானாய் என்று கேட்டார் அதற்கு என் அக்கா பரஞ்ஜோதி தான் காரணம் என்று சொன்னார். என் அக்காவின் கணவர் அவர் வீட்டுவிட்டுதால் என் அக்காவிற்கு 2வது வாழ்க்கை கொடுப்பதாக சொல்லியும் குழந்தை கொடுப்பதாக சொல்லியும் அவ்வாறு செய்ததாக என் அம்மாவிடம் சொன்னார். என் அக்கா பரஞ்ஜோதியிடம் சென்று நான் கர்ப்பமாக இருக்கிறேன் நீ கல்யாணம் செய்துகொள்வதாக சொன்னாய் என்று கேட்டதற்கு அவர் அதற்கு காரணம் இல்லை என்று சொல்லியுள்ளார். பின்னர் அவர் வீட்டில் எல்லோரிடமும் கேட்டுவிட்டு சொல்வதாக சொன்னார். ஆனால் அவர் அதன் பிறகு போன் செய்யவில்லை ஊர் பக்கமும் வரவில்லை. ஒரு 2, 3 மாதங்கள் விட்டு மீண்டும் சாட்சி 5, 6 மாதம் கழித்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாக சொல்லுக்கிறார். என் அக்கா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். என் அக்கா இந்த விவரத்தை யாரிடமும் சொல்லாததற்கு காரணம் பரஞ்ஜோதி என் அக்காவிடம் நடந்த ஷியத்தை வெளியே சொன்னால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டியுள்ளார். போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னிடம் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

நீ வெளியே சொன்னால் கொன்றுவிடுவேன் என்று என் அக்காவிடம் எதிரி எப்போது சொன்னார் என்றால் என் அக்காவை மார்ச் மாதம் மருத்துவமனைக்கு கூட்டிக்கொண்டு போனபோது என் அக்கா எதிரியிடம் விஷயத்தை சொல்ல அவர் அவ்வாறு சொல்லியுள்ளார். எதிரி மிரட்டியதாக சொல்லும் விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. எதிரி என் அக்காவை போனில்தான் மிரட்டியுள்ளார். என்னை இந்த வழக்கு விஷயமாக போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. மருத்துவமனைக்கு கூட்டி சென்று வந்த பிறகு 5, 6 மாதங்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் சொன்ன விவரங்கள் அனைத்தும் என் அக்கா என் அம்மாவிடம் சொல்லியுள்ளார் பிறகு என் அம்மா என்னிடம் சொன்னார். பரஞ்ஜோதி எந்த காலத்திலும் அசா1னின் கர்ப்பத்திற்கு காரணம் இல்லை என்று சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலிசார் புகார் கொடுப்பதற்கு முன்பே கிராமத்தில் உள்ள பெரியவர்களிடம் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். கிராமத்தில் கொடுத்த புகார் சம்மந்தமாக இருவரையும் அழைத்து விசாரித்தார்களா என்றால் அவர் வரவேயில்லை. கொரோனா லக்டவுன் சமயத்தில் மாவட்டம் விட்டு மாவட்டம் செல்ல கட்டுபாடுகள் இருந்தது என்றால் சரிதான். புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. மருத்துவமனைக்கு அக்காவுடன் நான் செல்லவில்லை. எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் நேரடியாக தெரியாது என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே 27.8.2020ல் ஒரு

புகார் கொடுக்கப்பட்டு அதன் பேரில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை.

மறு விசாரணை:- இல்லை.